**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No.453/2015**

**PW - 4**

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராஜ் ( LW. 4 ) |
| Father's / Husband Name | : | த/பெ.சின்னையா |
| Village | : | திருச்சி |
| Taluk | : | திருச்சி |
| Calling | : | ஆடிட்டர் |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.10.2025** என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மதியம் 01.00 மணி )**

**முதல் விசாரணை:–**

1) நான் மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து ஆடிட்டராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2010 ம் ஆண்டில் இருந்து 2012 ம் ஆண்டு வரை சேலம் ஹட்சன் அக்ரோ புரோடெக் லிமிட்டெட் நிறுவனத்தில் ஆடிட்டராக பணிபுரிந்து வந்தேன். 2012 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து 2014 ம் ஆண்டு மார்ச் மாதம் வரை நாமக்கல் ஹட்சன் அக்ரோ புரோடெக் லிமிட்டெட் நிறுவனத்தில் ஆடிட்டராக பணிபுரிந்து வந்தேன். எதிரியை எனக்கு தெரியும். எங்கள் நிறுவனத்தில் பொதுமேலாளராகவும், Production Head ஆகவும் பணியாற்றி வந்தார். ஹட்சன் அக்ரோ புரோடெக் லிமிட்டெட் என்ற நிறுவனம் பால், ஐஸ்கிரீம், பன்னீர் ஆகியவற்றை உற்பத்தி செய்து, விற்பனை செய்து வரும் நிறுவனமாகும். மாடுகளுக்கு நல்ல தீவணம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாட்டு தீவணத்தையும் உற்பத்தி செய்து நொய்யல், நாமக்கல், ஆந்திரா பாராமதி ஆகிய இடங்களில் உற்பத்தி செய்து வருகிறோம். மேற்சொன்ன அனைத்து உற்பத்திக்கும் அமர்நாத் தான் பொதுமேலாளராகவும், Production Head ஆகவும் பணியாற்றி வந்தார்.

2) உற்பத்தியான பொருட்களை எங்களது குளிரூட்டும் நிலையங்களுக்கு அனுப்புவது மற்றும் லாரி ஏஜென்டுகளை அமர்த்தவும், அதற்கான விலையை நிர்ணயம் செய்யும் முழுஅதிகாரமும்

எதிரிக்கு வழங்கப்பட்டிருந்தது. கடந்த 2014 ம் வருடம் சையது முகமது அபுதாகீர் என்பவர் நாமக்கல் ஹட்சன் நிறுவனத்தில் DGM, Production ஆக Management ஆல் பணியமர்த்தபட்டார். நதீம்ஷா என்பவர் மேற்படி நிறுவனத்தின் டிரான்ஸ்போர்ட் கான்ட்ராக்ட்டராக எதிரி அமர்நாத் தான் கொண்டுவந்தார். எங்களது DGM சையது முகமது அபுதாகீர் என்னிடம் வந்து டிரான்ஸ்போர்ட் பில்களில் முறைகேடுகள் நடந்துள்ளதாக என்னிடம் தெரிவித்தார். அதனால் 2012 ம் ஆண்டு முதல் 2014 ம் ஆண்டு வரைக்கான வரவு செலவுகளை தணிக்கை செய்தோம். கான்ட்ராக்டர் நதீம்ஷா கொடுத்த பில்லில் உள்ள தொகைக்கும், கிளைம் செய்த தொகைக்கும் வேறுபாடுகள் இருந்தது சுமார் ரூ.64,15,000/-ம் தொகை அதிகப்படியாக பில்களில் வேறுபாடுகள் வந்தது.

3) மேற்சொன்ன இரண்டு வருடங்களில் சுமார் ஐந்து கோடி வரைக்கும் டிரான்ஸ்போர்ட்டிற்கு என நதீம்ஷா கணக்கிற்கு எங்கள் நிறுவனத்தால் கொடுக்கப்பட்டிருந்தது. சில பில்களை நிறுவனம் வசம் ஒப்படைக்காமல் அமர்நாத் அவருடைய அறையில் வைத்திருப்பதாக சையது முகமது அபுதாகீர் என்னிடம் சொன்னார். பின்னிட்டு தான் நதீம்ஷாவின் அக்கௌண்ட், மெயில் ஐடி ஆகியவற்றை அமர்நாத் தான் பயன்படுத்தி வந்துள்ளார் என்பது பின்னிட்டு தான் எங்களுக்கு தெரியவந்தது.

**ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது**.

**மறு விசாரணை – இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம்:- மதியம் 01.10 மணி**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையொப்பம் செய்தார்.

ஒம்/-கா.செகனாஸ்பானு
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.